# ஈரோடு மாநகராட்சி

# மாமன்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்

## (திருவள்ளுவராண்டு 2042 ஐப்பசித் திங்கள் 30-ஆம் நாள்)

2011-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16–ஆம் தேதி (16.11.2011) புதன் கிழமை காலை 10.00 மணிக்கு மாமன்ற கூட்ட அரங்கில் நடைபெற்ற மாமன்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்.

– – –

## நடவடிக்கைகள்

**1.** ஈரோடு மாநகராட்சியில் நடைபெற்று முடிந்த உள்ளாட்சி தேர்தலைத் தொடர்ந்து அரசாணை எண். 169 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்)துறை நாள்-04.11.2011ல் 1981-ம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) பிரிவு 6-ன் (1)ஆம் உட்பிரிவு மற்றும் 2008-ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/2008) 8-ஆம் பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்களால் மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் 25/1981-ன் பிரிவு 6-ன் (1)-ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்காக கீழ்கண்டவாறு 6 நிலைக்குழுக்களை உருவாக்கி உத்திரவிடப்பட்டுள்ளது.

1. கணக்கு நிலைக்குழு
2. கல்வி நிலைக்குழு
3. பொதுசுகாதார நிலைக்குழு
4. வரிவிதிப்பு மற்றும் நிதி நிலைக்குழு
5. நகரமைப்பு நிலைக்குழு மற்றும்
6. பணிகள் நிலைக்குழு

மேற்கண்ட அரசாணையை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு-**

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**சி4/4086/11**

## 1. பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

**2.** அரசாணை எண். 169 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்)துறை நாள் 04.11.11-ல் ஈரோடு மாநகராட்சிக்கு கீழ்கண்ட நிலைக்குழுக்கள் அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

1. கணக்கு நிலைக்குழு
2. கல்வி நிலைக்குழு
3. பொதுசுகாதார நிலைக்குழு
4. வரிவிதிப்பு மற்றும் நிதி நிலைக்குழு
5. நகரமைப்பு நிலைக்குழு மற்றும்
6. பணிகள் நிலைக்குழு

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையரக செயலாளர் அவர்களின் கடிதம் ந.க.எண்.**M.E**1/9164/2011, நாள் 09.11.2011-ல் மேற்படி குழுக்களை குறைந்தபட்சம் 6 முதல் 15 வரையிலான உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட வேண்டும் என்றும், மேலும் ஒவ்வொரு குழுவிற்கும் நிர்ணயம் செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு மகளிருக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி 6 நிலைக்குழுக்களுக்கு உறுப்பினர்களின் எண்ணிக்கை மற்றும் மகளிருக்கான ஒதுக்கீடு நிர்ணயம் செய்வது குறித்து மாமன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. புதிதாக தோற்றுவிக்கப்படும் 6 நிலைக்குழுக்களுக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை மாமன்றம் நிர்ணயிக்கலாம்.
2. மகளிருக்கான ஒதுக்கீட்டை உறுதி செய்யலாம்.

**சி4/4086/11**

**2. 1. புதிதாக தோற்றுவிக்கப்படும் 5 நிலைக்குழுக்களுக்கும் ஒவ்வொரு குழுவிற்கும் 6 உறுப்பினர்கள் வீதம் நிர்ணயம் செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது. பணிகள் நிலைக்குழுவிற்கு மட்டும் 7 உறுப்பினர்கள் நியமனம் செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

**2. உறுப்பினர்கள் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு மகளிருக்கு என ஒதுக்கீடு செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

**இடம்- ஈரோடு** — **மேயர்,**

**நாள்- 17.11.2011** — **ஈரோடு மாநகராட்சி.**